சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

# பஞ்செட்டி வேலம்மாள் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

பொன்னேரி, பிப். 22-

பொன்னேரி அடுத்த பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று நடந்து. கல்லூரி தலைவர் முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். இயக்குனர் சசிகுமார் முன்னிலை வகித்தார். முதல்வர் சந்திரசேகர் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட கீக்கி தொழில்நுட்ப நிறுவன தலைவர் பாலாஜி லட்சுமணன், தனது கல்லூரி காலத்தில் நடந்த பல சுவையான நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார். இதில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஆலோசகர்கள் ரசாக், வாசு மற்றும் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். துணை முதல்வர் சவுந்தரராஜன் நன்றி கூறினார்.

Ref : Tamil Murasu
Date : 22.2.16

தினபூமி
thinaboomi.com
சென்னை, திங்கள், பிப்ரவரி 22, 2016
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி

# பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு



பொன்னேரி பிப்-22

பொன்னேரி அடுத்த பஞ்செட்டியில் அமைந்துள்ள வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியில் முந்தைய மாணவர்களின் சந்திப்பான ''அலுமினி மீட்'' நிகழ்ச்சி நடைப்பெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் சந்திரசேகர் தன்னுடைய வரவேற்புரையில் மாணவர்கள் சந்திப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட கீக்கி தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனைக்கூடத்தின் நிறுவனர் மற்றும் தலைவரான பாலாஜி லட்சுமணன் தன்னுடைய கல்லூரி காலத்தில் நடந்த பல சுவையான நிகழ்வுகளை தன்னுடைய உரையில் நினைவுகூர்ந்தார்.அதனை தொடர்ந்து கல்லூரியில் முந்தைய மாணவர்களுக்கான பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.இதில் 400க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் கலந்துக்கொண்டனர். நிறைவில் கல்லூரி துணை முதல்வர் முனைவர் சௌந்தரராஜன் நன்றியுரையாற்றினார். வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரியின் தலைவர் முத்துராமலிங்கம் இயக்குனர் சசிகுமார்,ஆலோசகர்கள் ரசாக், வாசு ஆகியோர் கலந்துக் கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தார்கள்.

Pg.No:9